# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

வழக்கு எண்.**24221**/விசாரணை/2009

<u>விசாரணை நடைபெற்ற நாள் 27.01.2010.</u>

| | |
|---|---|
| முன்னிலை: | முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன்,<br>எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திரு M.வஞ்சியப்பன்,<br>த/பெ.மண்ணு,<br>காளிக்கோயில் தெரு,<br>விளாங்குப்பம் கிராமம்,<br>கேளூர் அஞ்சல், போளூர் தாலுகா,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| பொது அதிகார அமைப்பு: | பொதுத் தகவல் அலுவலர்,<br>மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,<br>திருவண்ணாமலை.<br><br>பொதுத் தகவல் அலுவலர்,<br>வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி ஆணையரகம்,<br>கிண்டி, சென்னை – 600 032. |

*****

மனுதாரர் திரு M.வஞ்சியப்பன் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் திருமதி மீனாட்சி, துணை இயக்குநர் (வேலை வாய்ப்பு), வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி ஆணையரகம், கிண்டி, சென்னை இன்று (27.01.2010) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 21.05.2009 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 6(1)–ன் கீழ் பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம் அவர்களிடம் தன்னுடைய பதவி மூப்பு குறித்து 4 இனங்களில் சில தகவல்களைக் கேட்டிருக்கின்றார். 22.05.2009 அன்று மனுதாரருக்குத் தகவல்கள் தரப்பட்டுள்ளன. 11.09.2009 அன்று வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரகம், கிண்டி, சென்னை அவர்களிடமிருந்து திருவண்ணாமலை மாவட்டப் பொதுத் தகவல் அலுவலர் அளித்த தகவல்கள் சரியானவை என்று ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பெற்ற தகவல்கள் தவறானவை என்று சட்டப் பிரிவு 19(3)–ன் கீழ் 24.09.2009 அன்று ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (27.01.2010) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

1985–ல் மனுதாரர் வேலை வாய்ப்பு அலுவலத்தில் பதிவு செய்துள்ளார். 2004–ம் ஆண்டு புதுப்பிக்கத் தவறியுள்ளார். மீண்டும் 2006–ல் பதிவு செய்துள்ளார். தன்னுடைய பதிவு தொடர்ந்து பதிவு மூப்பு அடிப்படையில் உள்ளதா என்பது குறித்த தகவல் கேட்டுள்ளார். தனக்கு ஏன் நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு (Interview Card) அனுப்பவில்லையென்றும் மனுதாரர் கேட்டுள்ளார். மனுதாரருக்கு அளிக்கப்பட்ட தகவல்களைப் பார்க்கும் போது ஏன்? எதற்கு? என்ற கேள்விகளுக்குத் தகவல்களாக இராது என்ற காரணத்தால் அவற்றிற்குத் தகவல்கள் தர இயலவில்லையென்று பொதுத் தகவல் அலுவலர் கூறியதை ஆணையம் ஏற்கிறது.

மனுதாரர் கேட்டுள்ள பரிந்துரை தொடர்பான விவரங்கள் அடங்கிய ஆணை, பணியமர்த்தப்பட்ட விவரம் பெற்ற தேதியிலிருந்து SC/ST-ஐப் பொறுத்தவரை 5 ஆண்டுகளுக்கும், இதர வகைப்பாட்டினைப் பொறுத்த வரை ஓராண்டுக்கும் மட்டுமே பராமரிக்கப்படுவதாகவும், 1985–ஐப் பற்றி மனுதாரர் கேட்டுள்ள ஆவணங்கள் தொடர்பான தகவல்களை அளிக்க இயலவில்லையென்றும் பொதுத் தகவல் அலுவலர் கூறியதை ஆணையம் ஏற்கிறது. மனுதாரர் திரு D.நடராஜன் என்பவரைக் குறிப்பிட்டு தனக்கு உரிய தகுதியையேப் பெற்றிருந்த போதும் அவர் முன்னுரிமை பெற்று பதவி பெற்றுள்ளதால் சில தகவல்களைக் கேட்டதாக விசாரணையில் கூறினார். மேற்குறிப்பிட்ட நபர் 2007–ல் கிராம

உதவியாளர் பதவிக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே அவர் குறித்த பதவி மூப்பு விவரங்கள் தேவைப்படுவதாகவும் மனுதாரர் கூறினார்.

எனவே இவ்வாணை பெறப்பட்ட ஒரு வாரத்திற்குள் மனுதாரர் குறிப்பிட்டுள்ள 2007–ல் அறிவிக்கப்பட்ட கிராம உதவியாளர் பணிக்கான நேர்காணல் பரிந்துரை விவரத்தின் நகலை மனுதாரருக்கு அளித்து, ஒப்புகை பெற்று விவரத்தை ஆணையத்திற்குத் தெரிவிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 29.01.2010**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

**<u>வழக்கு எண்.24221/விசாரணை/2009</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,
திருவண்ணாமலை.

பொதுத் தகவல் அலுவலர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி ஆணையரகம்,
கிண்டி, சென்னை – 600 032.

திரு M.வஞ்சியப்பன்,
த/பெ.மண்ணு,
காளிக்கோயில் தெரு,
விளாங்குப்பம் கிராமம்,
கேளூர் அஞ்சல், போளூர் தாலுகா,
திருவண்ணாமலை மாவட்டம்.

*"ptl"*